Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, JULY 13, 2022

புதன்கிழமை ஜூலை 13, 2022 | ஒளி: 08 கதிர் 047 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



## நேற்று ஒப்பம்: இன்று 13

ஜனாதிபதி பதவியில் இருந்து ஜூலை 13 புதன்கிழமை (இன்று) இராஜினாமா செய்வதாக, ஜூலை 9ஆம் திகதி சனிக்கிழமை அறிவித்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இராஜினாமா கடிதத்தில், நேற்று (12) கையெழுத்திட்டுள்ளார்.




### நகர்த்தல் பத்திரம் நாளை பரிசீலனை
## ராஜபக்ஷர்களுக்கு தடைவிதிக்கவும்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ. லக்ஷ்மன் மற்றும் முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர்.ஆர்டிகல ஆகியோர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, உயர்நீதிமன்றில் நேற்று (12) நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் ஆகியோரால் இந்த நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## முத்திரையிட மறுத்ததால் சிக்கிக்கொண்ட கோட்டா
### விமானங்களை தவறவிட்டு இராணுவ முகாமில் தஞ்சமடைந்தார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கடவுச்சீட்டுக்கு முத்திரையிட கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர் நுழைவாயில் கடமையாற்றிய குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள், மறுத்தமையால் இலங்கையிலேயே அவர் சிக்கிக் கொண்டார் என்று ஏ.எஃப்.பி செய்திச் சேவை, நேற்று (12) செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, செவ்வாக்கிழமை (12) பட்டுப்பாதை நுழைவாயில் ஊடாக டுபாய்க்கு பயணிக்க இருந்தார் என்றும் விமான நிலைய ஊழியர்களுடனான அவமானகரமான மோதலை அடுத்து சொந்த நாட்டிலேயே அவர் சிக்கிக் கொண்டார் என்று ஏ.எஃப்.பி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## பசில் பறக்க முயன்றதால் பரபரப்பு
### முக்கிய பிரமுகர் சேவையில் இருந்து அதிகாரிகள் விலகினர்

குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அரசியல் பிரமுகர்கள், நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில், இலங்கையின் கட்டுநாயக்க மற்றும் மத்தளை சர்வதேச விமான நிலையங்களின் முக்கிய பிரமுகர் சேவையில் கடமையாற்றும் அதிகாரிகள் தமது கடமைகளில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் சங்கம், நேற்று (12) தெரிவித்தது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர்கள் பயன்படுத்தும் பட்டுப்பாதை (சில்க் ரூட்) நுழைவாயில் பணிகளில் இருந்து, நேற்று (12) நள்ளிரவு 12 மணிமுதல் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை விலக தீர்மானித்துள்ளதாக சங்கம் அறிவித்தது.

நேற்று (12) அதிகாலை டுபாய் நோக்கி செல்லவிருந்த விமானத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்காவுக்கு செல்வதற்கு திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, பட்டுப்பாதை நுழைவாயிலுக்கு வருகைதந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மீண்டும் எகிறியது பாண் விலை

ஒரு இறாத்தல் பாணின் விலையை நேற்று (12) நள்ளிரவு முதல் 20 ரூபாயால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம், ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்கள் 10 ரூபாயினால் அதிகரிக்கப்படும் எனவும் நேற்று (12) அறிவித்தது.

தொடர்ச்சி P2

## அநுரவுக்கு முழு ஆதரவு
### தயாசிறி ஜயசேகர அறிவிப்பு



பா.நிரோஸ்

பிரதமர் பதவியை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பெற்றுக்கொள்ள வேண்டுமென தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, பிரதமர் பதவியை அநுர பொறுப்பேற்றால் அவருக்கு ஆதரவை வழங்க கட்சி தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியாக சஜித்: பிரதமராக அனுர
### ஏற்றுக்கொள்ளத் தயார் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

பா.நிரோஸ்



ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைத்தால் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸவை நியமிப்பதுடன் பிரதமர் பதவியை அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்தது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

20ஆம் திகதி நாட்டில் ஜனாதிபதி ஒருவர் புதிதாக தெரிவு செய்யப்படுவார். நாட்டை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். பாராளுமன்றத்திலேயே குறுகிய கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். பாராளுமன்றத்துக்கு வெளியில் தீர்வை தேட முடியாது.

தொடர்ச்சி P2




வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழா, நேற்று (12) நடைபெற்றது.

மேலதிக படங்கள் P4

## இலங்கை மீள்வதற்கு நீண்டகாலம் தேவை
### பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்

ஆர்.யசி

இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் இருந்து விடுபட நீண்ட காலம் தேவைப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் பல்வேறு சவால்களுக்கு மக்கள் முகங்கொடுக்க நேரிடும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இளம் தலைமுறை இன்று நாட்டை விட்டு வெளியேறும் நிலையொன்று உருவாகியுள்ளது. இது ஆரோக்கியமான விடயம் அல்ல. எதிர்காலத்தில் தாக்கத்தை உருவாக்கலாம் எனவும் எச்சரிக்கின்றனர்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள்

தொடர்ச்சி P2



## உன்னிப்பாக அவதானிக்கிறோம்
### சீன வெளிவிவகார பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையின் சமீபத்திய முன்னேற்றங்களை சீனா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. நட்பு நாடு என்ற ரீதியிலும் ஒத்துழைப்பு பங்குதாரர் என்ற அடிப்படையிலும் தற்போதைய நெருக்கடிகளை எதிர்கொண்டு , நாட்டின் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் , பொருளாதாரத்தை புத்துயிர் பெற செய்யவும் ஒன்றிணைந்து செயற்பட முடிவதோடு,

தொடர்ச்சி P2

## ரணிலை ஜனாதிபதியாக்க மொட்டுக்குள் தீர்மானம்
### அமைச்சரவையை கலைக்க அமைச்சர்கள் சுயமாக தீர்மானம்



ஜனாதிபதியின் இராஜினாமா கடிதத்தை இன்றையதினம் சபாநாயகர் அறிவிப்பார் என தெரிவிக்கப்படு கின்ற நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது. எனினும் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும், சுயாதீன அணியினரும் அதனை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை எனவும், தற்காலிகமாக இவ்வாறான தீர்வுக்கு சென்றாலும் 19 ஆம் திகதி புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியு ள்ளனராம்.

அதேபோல், அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் தமது அமைச்சுப்பதவிகளை துறக்கவும், இடைக்கால அரசாங்கம்

தொடர்ச்சி P2

### ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகையை
## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீளக் கையளிக்க வேண்டும்
### ஓமல்பே சோபித்த தேரர் வலியுறுத்து

பா.நிரோஸ்



நாட்டு மக்களால் கைப்பற்றப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை என்பனவற்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகியவுடன் மீளக் கையளிக்க வேண்டுமென தெரிவிக்கும் ஓமல்பே சோபித தேரர், இவற்றை தொடர்ந்து மக்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் கூறினார்.

அத்துடன், சிங்கள-பௌத்த அதிகாரத்தை நாட்டிலிருந்து எவராலும் இல்லாதொழிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ரணிலையும் விரட்ட வேண்டும்
### போராட்டக்காரர்களிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

பா.நிரோஸ்

ஒரு நாளேனும் ஜனாதிபதிப் பதவியை வகிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடமளிக்க வேண்டாமென போராட்டக்காரர்களிடம் கோரிக்கை விடுத்தள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இன்றே ரணிலைப் பிரதமர் பதவியிலிருந்து வீழ்த்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மக்கள் போராட்டத்துக்கு இறுதி வெற்றிக் கிடைக்கும் வரையில் என்கிற தொனிப்பொருளில், அரசியற் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று (12) கொழும்பு பொதுநூலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களால் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் சிறிது சிறிதாக ஏற்படத் தொடங்கியிருக்கிறது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிழ்ச்சிக் கொள்கிறது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நகர்த்தல் பத்திரம் நாளை பரிசீலனை

உயர்நீதிமன்ற நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கியஅமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று (12) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வியாழக்கிழமை (14) மனுவைப் பரிசீலிக்க திகதி நிர்ணயிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை எதிர்வரும் 27ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவதற்கு உயர்நீதிமன்றம், கடந்த 6ஆம் திகதி தீர்மானித்தது.
அந்த மனுக்களைத் தாக்கல் செய்த மனுதாரர்களே இந்த நகர்த்தல் பத்திரத்தையும் நேற்று தாக்கல் செய்துள்ளனர்.
ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தற்போதைய நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ. டி.லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, மத்திய வங்கியின் நாணயச் சபை ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதியாக சஜித்: பிரதமராக அனுர

ஜனாதிபதி பதவியை ஏற்க தயாரென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்திருக்கிறார். சஜித் பொறுப்பேற்கப்போவது எரிமலையை எனவும் தெரிவித்தார்.

மேலும், ராஜபக்ஷர்களால் நாசமாக்கப்பட்ட நாட்டை பொறுப்பேற்க தயார் என சஜித் கூறுகிறார். எதிர்க்கட்சியில் இருந்தே ஒருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பின்னர் சஜித்துக்கே அதிகளவான வாக்குகள் கிடைத்தன. சஜித் மீது எந்தவிதமான ஊழல் குற்றச்சாட்டுக்களும் இல்லை. சஜித்துடன் நல்ல குழு ஒன்றும் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

பதில் ஜனாதிபதியாக சபாநாயகராக நியமிக்கப்பட்டால் அதனை நாட்டு மக்களும், சர்வதேசமும் ஏற்றுக்கொள்ளுமா?அரசியல் நிலைப்பாடுகளை ஒருபக்கமாக வைத்துவிட்டு நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களில் தேசிய மக்கள் சக்தியும் கலந்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஏதாவது நிபந்தனைகள் இருக்குமாக இருந்தால் அவற்றை முன்வைக்க வேண்டும். குறிப்பாக நாட்டைக் குறுகிய காலத்துக்குள் வழமைக்குக் கொண்டுவருவதற்கு தேசிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பு அவசியமானது . ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைத்தால், பிரதமர் பதவியை அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம். நாட்டுக்காக ஜனாதிபதி பிரதமர் பதவிகளை இருகட்சிகளும் பங்கிட்டுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# ரணிலையும் விரட்ட வேண்டும்

போராட்டக்காரர்களின் அனைத்துத் திட்டங்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக இணங்குகிறது. இதே விடயங்களை நாம் பல வருடங்களாக செய்ய முயற்சித்திருக்கிறோம். ஆனால் எங்களால் அதனை செய்ய முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக நிற்கிறது.

இன்று ஜனாதிபதி இராஜினாமா செய்வதாகக் கூறியிருக்கிறார். அது போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியென்றாலும், வெற்றியில் அது ஒருபகுதியாக மட்டுமே இருக்கும். பிரதமரும் பதவியிலிருந்து ஒரே நேரத்தில் விலகியிருக்க வேண்டும். பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஓடிவந்து ஏற்றுக்கொ ண்டிருக்காதிருந்தால், இரு மாதங்களுக்கு முன்பே ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகியிருப்பார் எனவும் தெரிவித்தார். பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பதவி விலகவில்லை என்றால் ஓரிரு நாட்களுக்காவது பதில் ஜனாதிபதியாக ரணில் செயற்படுவார். அது தடுக்கப்பட வேண்டும். ஒருநாள் கூட ஜனாதிபதி பதவியை ரணில் வகிக்கக்கூடாது. போராட்டக்காரர்களால் ஜனாதிபதி விரட்டியடிக்கப்பட்ட அன்றைய தினமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டுமென கட்சி தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

எங்களால் கூட்டங்களில் பேச மட்டுமே முடியும். ஆனால் அதனை போராட்டக்காரர்களால் மாத்திரமே சாத்தியப்படுத்த முடியும். எனவே ரணிலையும் பிரதமர் பதவியிலிருந்து விலக்க வேண்டும். பாராளுமன்றமும் மக்கள் ஆணையை இழந்துள்ளது. எனவே ஜனாதிபதி, பொதுத்தேர்தல் என்பன நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

# முத்திரையிட மறுத்ததால் சிக்கிக்கொண்ட கோட்டா

73 வயதான அவர், கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையை சனிக்கிழமையன்று பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் கைப்பற்றியதை அடுத்து, நாட்டை விட்டு வெளியேற முயன்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தான் கைது செய்யப்படுவதில் இருந்து தப்பிப்பதற்காகவும் தடுத்து வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் பதவி விலகுவதற்கு முன்னர் வெளிநாடு செல்ல விரும்புவதாக நம்பப்படுகிறது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் முத்திரையிட மறுத்ததையடுத்து, ஏனைய மற்ற விமான நிலைய பயணிகளின் பழிவாங்கலுக்கு பயந்து பொதுவான வழியாக செல்ல மாட்டேன் என்று அவர் குறிப்பிட்டதாகவும் ஏ.எஃப்.பி சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்துக்கு செல்லக்கூடிய நான்கு விமானங்களைத் தவறவிட்ட பின்னர், கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவியும் சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் உள்ள இராணுவ தளத்தில் இரவைக் கழித்ததாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் எகிறியது பாண் விலை

திங்கட்கிழமை (11) முதல் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 32 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.
உள்ளூர் சந்தையில் 84 ரூபாய் 50 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கோதுமை மா, தற்போது 300 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 400 ரூபாவை தாண்டவில்லை என்றும் உள்ளூர் சந்தையில் மாவின் விலை 300 ரூபாயாக அதிகரித்துள்ள தாகவும் குறிப்பிட்ட அவர், அதன் மூலம் கோதுமை மாவின் விலை 400% அதிகரித்துள்ளது என்றார்.
ஒரு இறாத்தல் பாணின் விலை 170 ரூபாயாக விற்கப்பட்டிருந்த நிலையில் இன்று முதல் 190 ரூபாயாக அதிகரிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீளக் கையளிக்க வேண்டும்

கொழும்பில் நேற்று(12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவார் என நாம் எதிர்பார்க்கிறோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகி புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடு எனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் கட்டுப்பாட்டில் உள்ள எமது நாட்டின் சொத்துக்களான ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை என்பனவற்றை மீள கையளிக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அக்கறையற்று இருக்கிறார். எனினும் நாட்டின் பாதுகாப்பு நாட்டு மக்களின் வசமே இருக்கிறது. எனவே தொடர்ந்து ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை என்பனவற்றை மக்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் தேசிய பாதுகாப்பு அச்சறுத்தலாக அது அமையும். மேலும் இந்த அரச சொத்துக்களை நாசம் செய்வதற்கான சதித் திட்டங்கள் எவருக்கும் தெரியாமல் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும், எனவே, ஜனாதிபதி பதிவி விலகியதும் அவற்றை மீள போராட்டக்காரர்கள் கையளிக்க வேண்டும் எனவும் தெரிவிதார்

# உன்னிப்பாக அவதானிக்கிறோம்

நாடு மற்றும் மக்களின் அடிப்படை நலன்களை மனதில் கொள்ள முடியும் என சீன வெளிவிவகார பேச்சாளர் வேங்க் வேன் பின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் செய்தியாளர் சந்திப்பொன்றில் இவற்றை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சகல துறைகள், நாடு மற்றும் நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு எம்மத்தியில் உள்ளது, அதேபோல் சமூக ஸ்திரத்தன்மை, பொருளாதார முன்னேற்றம், வாழ்வாதார முன்னேற்றம் என்பவற்றை துரிதமாக அடைய இலங்கையர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு சீனா தொடர்ந்தும் தன்னால் இயன்ற உதவிகளை செய்யும் எனவும் கூறியுள்ளார்.

# பசில் பறக்க முயன்றதால் பரபரப்பு

இதனையடுத்து, அவர் வெளியேறுவதற்கு முத்திரையிட மறுத்துள்ள அங்கிருந்த அதிகாரிகள் கடமைகளில் இருந்து விலகியதாக அறிவித்துள்ளனர்.
அதன்பின்னர் சாதாரண பயணிகள் செல்லும் பகுதியூடாக நாட்டை விட்டு வெளியேற பசில் முயன்ற போது, மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமை சமூக ஊடகங்களில் வெளியான வீடியோவின் மூலம் தெரியவந்தது. அதன்பின்னர் அவர் நாட்டை விட்டு வெளியேற முடியாமல் விமான நிலையத்தில் இருந்து திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று பிற்பகல் வேளையில், மத்தளை மஹிந்த ராஜபக்ஷ

சர்வதேச விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர் சேவையில் கடமையாற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளும் கடமையிலிருந்து விலகுவதாக அறிவித்தனர்.
மத்தளை விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பசில் ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்த காரணத்தாலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# அநுரவுக்கு முழு ஆதரவு

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டை மூன்று மாதங்களில் வழமைக்குக் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டங்கள் இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எனவே, அவர் பிரதமர் பதவியை ஏற்று செயற்பட வேண்டும். அவ்வாறு பிரதமர் பதவியை ஏற்கும் பட்சத்தில் நாம் அவருக்கு ஆதரவை வழங்குவோம். அதேபோல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டவர்கள் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்க வேண்டும். பாராளுமன்றத்தில் இரு கட்சிகளுக்கு பெரும்பான்மை இருக்குமாக இருந்தால் ஜனாதிபதி, பிதமர் பதவியை பகிர்ந்துகொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

அவ்வாறு இல்லை என்றால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர்கள் கட்சி தலைவர்களுடன் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், சபாநாயகர் ஆகிய பதவிகளை பெறுவதுத் தொடர்பில் கலந்துரையாட வேண்டும் என்றார்.

# இலங்கை மீள்வதற்கு நீண்டகாலம் தேவை

குறித்து பொருளாதார நிபுணர்களின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வேர்ட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், பொருளாதார நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல் இது குறித்து தெரிவிக்கையில் :- முதலில் எரிபொருள், மின்சார தேவைகளை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அத்தியாவசிய உணவு தேவையை பூர்த்திசெய்ய வேண்டும். மக்களுக்கு உண்மைகளை கூறி மக்கள் ஒத்துழைப்புக்களை பெற்று உறுதியான பொறிமுறை ஒன்றினை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நேரடியாக மக்களை சென்றடையும் வேலைத்திட்டம் அவசியமாகும். யதார்த்தமான, தேவையான விடயங்களை மட்டுமே இப்போது செய்தாக வேண்டும். மிக மோசமான பொருளாதார கொள்கையும், தீர்மானங்களும் நாட்டின் இன்றைய நிலைமைக்கு காரணமாகும். அதேபோல் அளவுக்கு அதிகமான ஊழல் செயற்பாடுகள் மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இப்போதாவது ஊழல் செயற்பாடுகளை நிறுத்தக்கூடிய உறுதியான வேலைத்திட்டமொன்று அவசியம். ஊழல் தடுப்பு நிறுவனம் ஒன்றினை உருவாக்கி சர்வதேச அமைப்புகளின் மேற்பார்வையை ஏற்படுத்தி கண்காணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இரண்டு தரப்பிலும் ஊழல் நிறைந்த செயற்பாடுகளே காணப்படுகின்றன என்றார்.

சிங்கப்பூர் பல்கலைகழகத்தின் விரிவுரையாளரும், பொருளாதார ஆய்வாளருமான கலாநிதி கணேசன் விக்னராஜ தெரிவிக்கையில் :- இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்ய வாய்ப்பில்லை. நெருக்கடிகள் அதிகரிக்கும். ஆனால் இப்போது எடுக்கும் ஆரோக்கியமான மற்றும் ஸ்திரமான வேலைத்திட்டங்கள் அடுத்த ஆண்டில் ஓரளவு நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி அடிப்படை பொருளாதார கட்டமைப்பொன்றை உருவாக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முதலில் ஸ்திரமான அரசியல் கொள்கையொன்று அவசியம். இளம் தலைமுறை இன்று நாட்டை விட்டு வெளியேறும் நிலையொன்று உருவாகியுள்ளது. இது ஆரோக்கியமான விடயம் அல்ல. எதிர்காலத்தில் தாக்கத்தை உருவாக்கலாம். ஆனால் மாற்று வழியில்லை. எனவே சமூக மாற்றமொன்று இப்போது அவசியமாகின்றது. அத்துடன் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் அத்துடன் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் விதமாக தீர்மானங்கள் எடுக்க வேண்டும். அது அரசாங்கத்தின் கைகளில் உள்ளது என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன கூறுகையில் :- இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் இருந்து விடுபட நீண்ட காலம் தேவைப்படும். முதலில் இடைக்கால அரசாங்கம் ஒன்றினை உருவாக்கி அடிப்படை காரணிகளை செய்து முடிக்கவேண்டியுள்ளது. கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் மட்டுமல்ல மேலும் பல்வேறு வேலைத்திட்டங்களை எடுத்தாக வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. முதலில் செலவுகளை முழுமையாக நிறுத்தியாக வேண்டும். திறைசேரி வெறுமையாக உள்ளது. ஆகவே அனாவசிய தேவைகளுக்கு இனிமேல் இடமளிக்க முடியாது. இன்று மிகப்பெரிய சவாலொன்றுக்கு நாம் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. ஸ்திரமான அரசாங்கமே இதற்கு தீர்வாக அமையும். அடிமட்ட மக்கள் மட்டுமல்ல நடுத்தர மக்களும் மிக மோசமாக இன்று பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது அடிப்படை பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டியுள்ளது என்றார்.

# ரணிலை ஜனாதிபதியாக்க மொட்டுக்குள் தீர்மானம்

ஒன்றினை அமைத்து அதில் சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்வாங்கி நெருக்கடிக்கு விரைவில் தீர்வொன்றை காண முழுமையாக ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுப்பதாகவும் அமைச்சரவை அமைச்சர்கள் சுயமாக தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷதெரிவித்தார்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு மூலம் ஜூலை 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளதுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக பதவி விலக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## வருடாந்த பொதுக்கூட்டம்

சிலோன் ஆட்டோமொபைல் சங்கத்தின் 117வது வருடாந்த பொதுக் கூட்டம் ஜூன் 29 ஆம் திகதியன்று சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர், தம்மிக்க ஆட்டிகல, வாழ்நாள் அங்கத்துவ ஆட்டோமொபைல் சங்க நியமனக் கடிதத்தை உப போஷகர் சசன கீர்த்தி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரிடம் கையளிப்பதை படங்களில் காணலாம்.

# கோட்டா கௌரவமாக விலகிச் செல்வதே நல்லது

பா.நிரோஸ்

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகுவாரா என்பது தொடர்பில் தெளிவில்லாமல் இருப்பதாக தெரிவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, எவ்வாறாயினும் கோட்டாவால் ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து நீடிக்கமுடியாது எனவும் தெரிவித்தார்.



எப்போதுமே ஜனாதிபதி பதவியில் இருப்பவர்கள் மக்கள் ஆணையுடனேயே செயற்பட வேண்டும். சூழ்ச்சிகளை மேற்கொண்டு ஜனாதிபதி பதவியை கோட்டாபய ராஜபக்ஷ தொடர நினைத்தால் அது நாட்டுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, கோட்டாபய ராஜபக்ஷகௌரவமாக விலகிச் செல்வதே நல்லது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்கிற வேறுப்பாட்டுக்கு அப்பால் ஒன்றிணைந்து நாடு முகங்கொடுக்கும் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். நெருக்கடி நிலைமைகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பொதுவானதொரு வேலைத்திட்டத்துக்கு அனைவரும் செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை வழமைக்குக் கொண்டுவந்ததன் பின்னர் தேர்தலுக்கு செல்ல வேண்டும். இந்தத் தருணத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவில்லை என்றால், நாடு மேலும் பாரதூரமான நிலைமைக்கு முகங்கொடுக்கும். அரசியல், பொருளாதாரம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இரு குழுக்களை நியமித்துள்ளார். பொருளாதார குழுவின் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான யோசனைகள் இந்த அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளன. அதனை அனைவரும் ஒன்றிணைந்து அமுல்படுத்துவோம் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த எவரையும் ஜனாதிபதி, பிரதமர் பதவிக்கு நியமிக்கக்கூடாது என்பதே போராட்டக்காரர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளளது. எனவே, பதில் ஜனாதிபதியாக சபாநாயகரே செயற்பட வேண்டும். அதன் பின்னரே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் கூறினார்.

எவ்வாறாயினும் பிரதமர் பதவி விலகாவிட்டால் அரசியலமைப்பின்படி பிரதமரே பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும். எனினும் தற்போதுவரையில் ஜனாதிபதி பதவியில்கோட்டாபய ராஜபக்ஷ இருக்கிறார். பிரதமரை ஜனாதிபதி பதவி விலக்கினால்,, அரசியமைப்பின்படி பதில் ஜனாதிபதியாக சபாநாயகரே தெரிவு செய்யப்படுவார்.

அரசியலமைப்பு ரீதியாக இந்நிலைமைகளைக் கையாள்வதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனினும் அதனையே செய்ய வேண்டியிருக்கிறது. பிரதமர் பதவியில் ரணில் தொடர்ந்து இருக்க முடியாது. ஜனாதிபதி பதவி விலகி புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படும் வரையில் பிரதமராக வேண்டுமென்றால் ரணில் தொடரலாம். எவ்வாறாயினும் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டால் ரணில் பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கையில் மெய்நிகர் நாணயங்களின் பயன்பாடு தொடர்பில்
# மத்தியவங்கி எச்சரிக்கை

இலங்கை மத்திய வங்கியால் முன்னர் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டவாறு, மறைகுறி நாணயங்கள் (Cryptocurrencies) உட்பட மெய்நிகர் நாணயங்களை ஈடுபடுத்துகின்ற திட்டங்களை தொழிற்படுத்துவதற்கு எந்தவொரு நிறுவனத்திற்கோ அல்லது கம்பனிக்கோ ஏதேனும் உரிமத்தை அல்லது அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கி வழங்கவில்லை என அறிவித்துள்ளது.

மெய்நிகர் நாணயங்கள், தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் பெருமளவில் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத டிஜிட்டல் ரீதியான பெறுமதியை பிரதிநிதித்துவப்ப டுத்துவதுடன் இலத்திரனியல் ரீதியாக வர்த்தகப்படுத்தப்படக் கூடியவையாகும். 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் ஊடக அறிக்கைகளூடாக இலங்கை மத்திய வங்கியால் முன்னர் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டவாறு, மறைகுறி நாணயங்கள் (Cryptocurrencies) உட்பட மெய்நிகர் நாணயங்களை ஈடுபடுத்துகின்ற திட்டங்களை தொழிற்படுத்துவதற்கு எந்தவொரு நிறுவனத்திற்கோ அல்லது கம்பனிக்கோ ஏதேனும் உரிமத்தை அல்லது அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கி வழங்கவில்லை என்பதுடன் ஏதேனும் ஆரம்ப குற்றி வழங்கல் (Initial Coin Offerings), வார்த்தல் தொழிற்பாடுகள் (Mining Operations) அல்லது மெய்நிகர் நாணய பரிமாற்றல்கள் (Virtual Currency Exchange) என்பவற்றுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

மேலும், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய செலவாணித் திணைக்களத்தால் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கமைவாக, பற்று அட்டைகள் (Debit Cards) மற்றும் கொடுகடன் அட்டைகள் (Credit Cards) போன்ற இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் (Electronic Fund Transfer Cards)> மெய்நிகர் நாணயக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, மெய்நிகர் நாணயங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதியியல் சாதனங்களாக (unregulated financial instruments) கருத்திற்கொள்ளப்படுவதுடன் இலங்கையில் அவற்றின் பயன்பாடு தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையையும் பாதுகாப்பையும் கொண்டிருக்கவில்லை.




ஆகையால், மெய்நிகர் நாணயங்களின் முதலீடுகள் மூலம் பயன்பாட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய கணிசமான நிதியியல், தொழிற்பாட்டு, சட்ட மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் அதேபோன்று வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. இணையதளம் அதேபோன்று வேறு ஊடக வடிவங்கள் ஊடாக வழங்கப்படும் பல்வேறு வகையான மெய்நிகர் நாணய திட்டங்களுக்கு இரையாக வேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

# முன்னுரிமை வழங்கும் நாடாக மாற்றுங்கள்

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும், அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் கூடிய சர்வகட்சி அரசாங்கத்தை விரைவில் உருவாக்குவதற்கும் தேர்தலை நடத்துவதற்கும் வழி செய்ய வேண்டுமெனவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அனைத்துக் கட்சித் தலைவர்களும் அமுல்படுத்துமாறும் கூட்டு ஆடைகள் சங்க மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யும் அரசியல் முறைமை சீர்திருத்தம் குறித்த வேண்டுகோள் தொடர்பிலும் கூட்டு ஆடைகள் சங்க மன்றம் மீண்டும் இதன்போது கவனம் செலுத்தியுள்ளது.

“இலங்கையின் வரலாற்றில் மிகவும் சவாலான மற்றும் நெருக்கடியான இந்த சூழ்நிலையிலல், நமது நாடு எதிர்கொண்டுள்ள இந்த துயரமான நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், இலங்கையை கட்டியெழுப்புவதற்கும் நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதற்கும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

“இந்த நேரத்தில் மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டமான சூழ்நிலையை நாங்கள் முழுமையாக புரிந்துகொள்வதுடன், தங்கள் போராட்டங்களை வன்முறையின்றி நடத்தவும், பொறுமையுடனும் உறுதியுடனும் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் சட்டம் ஒழுங்கை பேணி பாதுகாப்பதுடன் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்படுமாறு பாதுகாப்புப் படையினரைக் கேட்டுக் கொள்கின்றோம்.” என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அலரிமாளிகையில் பிரதமர் ஊடக பிரிவின் காரியாலயம் ஆர்ப்பாட்டக்காரர்களால் சேதப்படுத்தப்பட்டமை தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவினால் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஜூன் மாதத்தில் 27,937 பேர் பறந்தனர்

இவ்வருடம் ஜூன் மாதத்தில் 27,937 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இவர்களில் 18,083 பேர் தாங்களாகவே வேலை வாய்ப்புகளை தேடிக்கொண்டதாகவும், 9,854 பேர் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மூலம் வேலைவாய்ப்பைப் பெற்றதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

2022 ஜனவரி மற்றும் ஜூலை முதல் வாரத்துக்கு இடையில், 156,179 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது. 100,767 பேர் தங்கள் சொந்த வழிகளில் வேலைக்காக சென்றுள்ளனர். அத்துடன் 55,411 பேர் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மூலம் சென்றுள்ளனர் குவைத்- 39,216 பேர், கட்டார் -36,022 பேர், சவுதி அரேபியா- 26,098 பேர், தென் கொரியா -3,219 பேர், ஜப்பான்- 2,576 பேர் வேலைக்காகச் சென்றுள்ளனர்.




# கிம்புலாஎல பிரதீப் மீது துப்பாக்கிச்சூடு

புதுசெட்டித் தெருவில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கிம்புலாஎல பிரதீப் என்பவரே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


ஹின்னி அப்புஹாமி சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர் மீதே நேற்று (12) நண்பகல் 12 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள ப்பட்டுள்ளது. அவ்விடத்தில் இருந்து இரண்டு வெற்றுத் தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூடு மேற்கொண்டவர்கள் எப்படி வந்தார்கள் என்பது குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை என்றும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



## அனுதாப பதிவு...

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் மறைவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர், கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்துக்கு நேற்று (12) சென்று, இராஜதந்திரிகளின் அனுதாப பதிவுக்கான நினைவுப் புத்தகத்தில் தங்களுடைய அனுதாபகங்களை பதிவிட்டனர்.



## ஜனாதிபதி தெரிவின்போது
# எம்முடன் இணங்குபவர்களை ஆதரிப்போம்
### விமல் கட்சி அறிவிப்பு

பா.நிரோஸ்

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகையில் நடப்பவற்றைப் பார்க்கும்போது இது தென் சூடானா என வெளிநாடுகள் கேள்வி எழுப்புவதாக தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச,ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பின்போது தமது யோசனைகளுக்கு இணங்கும் எவருக்கும் ஆதரவளிக்க தயார் எனவும் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

நாட்டில் ஒரேயொரு ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகையே இருக்கிறது. அவ்வாறான நிலையில் அங்கு நடப்பவற்றைப் பார்க்கும்போது இது தென் சூடானா என சில நாடுகள் கேட்கும் நிலை வந்துள்ளது. நாட்டில் அராஜக நிலை ஏற்பட்டஉள்ளதாகக் கூறி சில விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஒருவரை ஒவருவர் குற்றம் சுமத்திக்கொண்டிருந்தால் தென்சூடானைவிட மோசமான நிலைக்கு இலங்கை செல்லும். எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

குறிப்பாக தேசிய சுதந்திர முன்னணி சில யோசனைகளை முன்வைத்துள்ளது. இந்த யோசனைகளுக்கு இணங்குவர்களுக்கு ஜனாதிபதி தெரிவின்போது ஆதரவை வழங்க தயார் எனவும் தெரிவித்தார். சிவில் அமைப்புக்களையும் உள்ளிடக்கிய சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். ஜனாதிபதி பதவிக்கு மூவர் போட்டியிடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பாராளுமன்றத்தில் உள்ள வாக்குகள் மூன்றாகப் பிளவுப்படப்போவதாகவும் தெரிவித்தார்.



சர்வகட்சித் தலைவர்களே

# விரைந்து செயற்படுங்கள்

■ வ.திவாகரன்



சர்வகட்சி தலைவர்களை விரைந்து செயற்படுமாறு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்கால நிலைமை தொடர்பில் நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வகட்சி ஆட்சி முறைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பங்களிப்பை செய்வதாக இருந்தால், ஜனாதிபதியும், பிரதமரும் இராஜினாமா செய்வதோடு, இனப் பிரச்சினை தொடர்பாக எழுத்து வடிவில் ஒரு பொறிமுறையை அமுல்படுத்த வேண்டும்.

"மக்களின் போராட்டம் ஊடாக குடும்ப, கொடுங்கோல் மற்றும் ஊழல் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவியை விட்டு விலக வேண்டுமென மக்கள் கிழந்தெழுந்த சூழலில், இராஜினாமாவை தாமதிப்பதென்பது, ஓங்கி ஒலித்த மக்கள் குரலுக்கு சவால் விடுக்கின்ற செயற்பாடாகும்.

"எனவே, தாமதியாது பதிவி விலகுவதோடு, மக்கள் எதிர்நோக்குகின்ற உடனடிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாகவும், பிரதமரின் தனிப்பட்ட நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாகவும், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாகவும், சர்வகட்சி அமைப்பு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"மட்டுமல்லாமல், புதிய ஜனாதிபதியையும் பிரதமரையும் நியமித்து, அவர்களுக்கு விரைவாக செயல் வடிவம் கொடுக்குமாறும் சர்வ கட்சித் தலைவர்களை கேட்டுக் கொள்கின்றேன்" என்றார்.

பிரதமர் பதவியை

# தமிழர்கள் ஏற்கக்கூடாது

■ செ.கீதாஞ்சன்



ற்போதைய சூழ்நிலையில், பிரதமர் பதவியை தமிழர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவ்வாறு ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்களையும் ஓர் அரசியல் சதிவலைக்குள் கொண்டுசென்று நெருக்குகின்ற நிலமையை உருவாக்கும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

இது தொர்பாக அவர் ஊடகங்களுக்கு நேற்று (12) தெரிவிக்கையில்,

"சர்வகட்சி கூட்டத்திலே ஜனாதிபதி பதவி விலகுவதாகவும், புதிய பிரதமரை நியமிப்பது தொடர்பாகவும் பல்வேறு கருத்துகளை நாட்டு மக்களுக்கு சபாநாயகர் அறிவித்திருக்கிறார்.

"ஒட்டுமொத்த நாட்டு மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி உடன் பதவி விலகவேண்டும். அதே போலத்தான் பிரதமரையும் இந்த நாட்டு மக்கள் விரும்பவில்லை.

"எம்மைப் பொறுத்தமட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாக பதவி விலகவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அந்த இடத்துக்கு யார் வரவேண்டும் என்பதில் எங்களுக்கும் எங்கள் கட்சிகளுக்கும் மக்களுக்கும் மாற்றுக் கருத்து இருக்கலாம். யார் அந்த இடத்துக்கு வரவேண்டும் என்பதில் இன்னும் நாங்கள் முடிவெடுக்கவில்லை.

"எனினும், இப்பொழுது இருக்கின்ற நிலையில் தமிழ்மக்களின் இன பிரச்சினைக்கு நிதந்தர தீர்வு எற்படுத்தப்பட்டு, அது அமுல்படுத்தப்பட்டால் மட்டும்தான் நாங்கள் அரசுடன் சேர்ந்து இயங்குகின்ற சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிவிட்டால் எந்தப் பதவிகளையும் எடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்" என்றார்.



டயர் வெடித்து

# மின்கம்பத்தில் மோதிய வான்

## உயிர்தப்பிய சாரதி

■ ரீ.எல்ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த வானின் டயர் வெடித்ததனால், அந்த வான் பாதையை விட்டு விலகி, மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் வானுக்கு பாரிய சேதம் எற்பட்டுள்ளதுடன், மின்கம்பத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (11) மாலை இடம்பெற்ற இவ்விபத்தின்போது வானிலிருந்து எயார்பேக் சரியாக இயங்கியதால் சாரதி உயிர் ஆபத்தின்றி தப்பினார்.

எயார்பேக் இல்லாதிருந்திருந்தால் ஸ்டேரிங்கில் நெஞ்சுப்பகுதி மோதுண்டு சாரதி உயிரிழந்திருப்பார் என த்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்

இந்த விபத்து தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.




# மக்கள் விரும்பும் ஆட்சி வேண்டும்

## மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

■ கனகராசா சரவணன்

சர்வகட்சி ஆட்சி முறை வேண்டாம்; மக்கள் விரும்பும் ஆட்சி முறை வேண்டுமென, மட்டக்களப்பு காந்திபூங்காவுக்கு முன்னால் மக்கள் விடுதலை முன்னணி கட்சியில் ஆதரவாளர்கள், நேற்று (12) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் என்.சுந்தரேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"ஊழலைத் தவிர நீங்கள் உருப்படியாக செய்தது என்ன", "நாட்டை விற்று ஏப்பம் விட்ட கொள்ளையரை விரட்டியடிப்போம்", "திருடர்களை விரட்டியடிப்போம்", "உங்களுக்கு கொண்டாட்டம்; மக்களுக்கு திண்டாட்டம்" மற்றும் "அரச நிறுவனங்ளை விற்பதை நிறுத்து" என அவர்கள் இதன்போது கோஷமிட்டனர்.

மேலும், "மக்கள் ஆட்சிக்கு இடங்கொடு" மற்றும் "சர்வகட்சி அரசாங்கம் வேண்டாம்" என்ற பல சுலோகங்கள் ஏந்தியவாறும் கோஷமிட்டனர்

சுமார் அரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இரண்டாவது நாளாகவும்

# தொடரும் பணிப் புறக்கணிப்பு

■ எம்.எம்.அஹமட் அனாம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை, ஒட்டமாவடி மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தயோகத்தர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று (12) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும், அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் இவ்வாறு தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மறு அறிவித்தல் வரை

# மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள்



■ எம்.எஸ்.எம். ஹனீபா

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கான சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், நேற்று (12) தெரிவித்தார்.

உத்தியோகத்தர்களின் வரவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு, சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு, பொதுமக்களுக்கான அத்தியாவசிய அவசரத் தேவைகளுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தின் சேவைகள், மோட்டார் வாகன ஆணையாளர், பதிவாளர் திணைக்களம் போன்றவற்றின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கான நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



எரிபொருள் கோரி

# கிண்ணியாவில் கவனயீர்ப்பு

■ ஒலுமுதீன் கியாஸ்

கிண்ணியா பிரதேச சுகாதார ஊழியர்கள் தங்களுக்கான எரிபொருளை கேட்டு, நேற்று (12) கவனயீர்ப்புப் போராட்டனர்.

கிண்ணியா தள வைத்தியசாலை வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, அலுவலக ஊழியர்கள் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இவர்கள் கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து பேரணியாகச் சென்று, கிண்ணியா பிரதேச செயலகம் முன்பாக ஒன்று கூடி, தங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, "கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற ஊழியர்களில் 90 சதவீதமானோர் வெளிப்பிரதேசங்களில் இருந்து வருகை தருகின்றவர்கள். இவர்களுக்கு எரிபொருட்கள் இன்மையால், கடமைக்கு வருவதில் அல்லது இவர்களை நாங்கள் கடமைக்கு அழைப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றோம்.

"இதன் காரணமாக வைத்தியசாலையை மூட வேண்டிய கட்டத்துக்கு தள்ளப்பட்டு இருக்கிறோம்.



பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு

# விசேட செய்தி

■ வி.நிதர்ஷன்

யாழ். மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் சங்க தலைவர் மற்றும் பிரதிநிதிகள், யாழ்.மாவட்டச் செயலகத்திடம், பேக்கரி உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பாக எதிர்கொண்ட இடர்பாடுகள் தொடர்பாக முன்வைத்த கோரிக்கைக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

எனவே, பேக்கரி உற்பத்தியாளர்கள் தங்களது பேக்கரி சங்கம் ஊடாக தொடர்புகொண்டு, உற்பத்தி விற்பனையை தடையின்றி மேற்கொள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நயினை நாகபூசணி தேர்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழா, நேற்று (12) நடைபெற்றது.
இத்தேர்த்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு அம்மனின் அருள் காட்சியை கண்டு களித்தனர்.

(படங்கள் – எம்.றொசாந்த்)





எரிபொருள் கோரி

# ஏ9 வீதியில் மறியல்

■ வி.நிதர்ஷன்

எரிபொருள் வழங்கக் கோரி, 9 வீதியை வழிமறித்து பொதுமக்கள், நேற்று (12) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு அருகில் உள்ள ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களாக எரிபொருளுக்காக காத்திருந்தவர்களே ஏ9 வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இணைய வழியில் பதிவு செய்பவர்களுக்கே எரிபொருள் வழங்கப்படும் என மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்ததால், அங்கு நீண்ட நாட்களாக காத்திருந்த பொதுமக்களே வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# மன்னாரில் கடல் சீற்றம்

■ ரொசேரியன் லெம்பர்ட்

தனுஷ்கோடி தெற்கு மற்றும் வடக்கு கடல் பகுதி வழக்கத்துக்கு மாறாக சீற்றத்துடன் காணப்படுவதால், முகுந்தராயர் சத்திரத்தில் உள்ள படகு நிறுத்தும் தளம் மீது கடல் அலைகள் மோதி நேற்று (12) இராட்சத அலைகள் எழுந்தன.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இரண்டுமே வழக்கத்திற்கு மாறாக 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியதுடன், கடல் சீற்றம் ஏற்பட்டது.

பலத்த காற்று வீசி வருவதால் ஏற்படும் புழுதி புயல் காரணமாக ஒரிரு இடங்களில் கடற்கரை மணலால் முடியுள்ளது.

இந்தக் கடல் சீற்றம் காரணமாக மீவர்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.





ஊடக அடக்குமைக்கு எதிராக

# போராட்டமும் கண்டனமும்

■ எம்.றொசாந்த், சண்முகம் தவசீலன்

ஊடக அடக்கு முறை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து, யாழ்.பல்கலைக்கழகம் முன்றலில் நேற்று (12) கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக முன்றலில் நேற்று மதியம் 12 மணியளவில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டு, தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

இதேவேளை, ஊடகவியலாளர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை முல்லைத்தீவு ஊடக அமையமும் வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பில் மேற்படி அமையம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், "ஊடகவியலாளர்களின் ஊடக பணிக்கு இடையூறு விளைவிக்கும், அச்சுறுத்தல் மேற்கொள்ளும் சித்திரவதைக்கு உட்படுத்தும் அரச பாதுகாப்பு தரப்பினரின் இவ்வாறான தொடர் செயற்பாடுகளை அமையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

"அத்துடன், ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளில் அக்கறையுள்ள உரிய தரப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும், சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் இலங்கையில் எதிர்வரும் நாட்களில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி நிற்கின்றோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



## சத்தியாகிரகப் போராட்டம்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக பதவி விலகக் கோரி, தேசிய பிக்குகள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சத்தியகிரகப் போராட்டம் நேற்று (12) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்பாக ஆரம்பமானது.(சேஹ்ன் செனவிரத்ன

## பள்ளத்தில் கவிழ்ந்த கெப் வாகனம்

ராமு தனராஜா

பசறை- நமுனுகுலை பிரதான வீதியில் கெப் வாகனம் ஒன்று நேற்று (12) காலை 8 மணியளவில் 30 அடி பள்ளத்தில் விழுந்த விபத்துக்குள்ளானது.

கோணக்கல கஹவத்தை பகுதியில் இருந்து பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த கெப் வாகனமே, புஹுல்வத்தை பாடசாலைக்கு அருகாமையில் இருந்த பாலத்தில் இருந்து சுமார் 30 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து, வாகன சாரதி அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு பசறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டப் பின்னர்,



மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப் பொருளுடன் தாயும் மகனும் கைது

அஜித்லால் சாந்தஉதய

30 கிலோகிராம் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த தாயும் மகனும் எம்பிலிப்பிட்டிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட அதிக நிறையுடைய போதைப் பொருள் இதுவனெ தெரிவித்துள்ள பொலிஸார், பை மற்றும் ஆடைகள் தைக்கும் வியாபாரத்தில் ஈடுபடும் 46 வயதுடைய தாயும் 22 வயதுடைய மகனுமே கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். குறித்த பெண், ஆடைகள் மற்றும் பைகள் தைப்பதற்கான பொருள்களை கொண்டு வரும் போர்வையில், போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் எம்பிலிப்பிட்டிய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு விநியோகிக்கப்படவிருந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் இதனுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரையும் ஏனையவர்களையும் கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

### வீதியில் விழுந்துள்ள கற்பாறைகளை

## அகற்றுமாறு சாரதிகள் கோரிக்கை

பி.கேதீஸ்

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, தலவாக்கலை- டெவன் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கற்பாறைகள் சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளன.

எனினும் அக்கற்பாறைகள் இதுவரை அகற்றப்படாமல் இருப்பதாக சாரதிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

எனவே வாகனப் போக்குவரத்துக்கு இடையூராக இருக்கும் இந்த கற்பாறைகள்



பிரதான வீதியோரமாக கிடப்பதால் இதனை உடனடியாக அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

கொழும்பில், ஜூலை 9 ஆம் திகதியன்று ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை கண்டித்து, மொனராகலையில் நேற்று முன்தினம் (11) எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. மொனராகலை பிரதேச ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகளும் அதில் பங்கேற்றிருந்தனர்.

(சுமணசிறி குணதிலக்க)





### பெருந்தோட்ட மக்களுக்கு

# கடும் சிரமம்

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் சேவைக்கட்டணங்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக பெருந்தோட்ட மக்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். அத்துடன் தங்களுடைய வருமானத்துக்கு ஏற்ற வகையில்கூட போஷாக்கான உணவை உண்ணமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துச் செலவை நினைத்துக்கூட பார்க்கமுடியாது உள்ளது. நகரங்களுக்குச் சென்று பொருட்களை கொள்வனவுச் செய்துக்கொண்டு வந்தால், அதற்கான ஓட்டோ கட்டணமும் பல மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் பிரச்சினைகள் காரணமாக, ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்வதிலும் கடுமையான சிரமங்களுக்கு



முகங்கொடுப்பதாக அம்மக்கள் தெரிவிக்கின்றன. குளிர்பிரதேசங்கள் என்பதால், ஒருவேளையேனும் கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுகளை உண்ணவே வேண்டும்.

எனினும், கோதுமையின் விலையும் அதிகரித்திருப்பதால், வயிற்றுப் பசியை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்துக்கொள்ள முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

போதியளவு எரிபொருட்கள் கிடைக்காமையால் பல தோட்டங்களில் வேலைகள் குறைவாக வழங்கப்படுகின்றன. சில இடங்களில் தேயிலைத் தொழிற்சாலைகளும் இழுத்து மூடப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினர்.

அதுமட்டுமன்றி, பெருந்தோட்டங்களில் பணிபுரிபவர்களும் பல்வேறான இன்னல்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். தேயிலை மலைகளில், விஷ ஜந்துக்களின் பெருக்கம் அதிகரித்திருக்கிறது. சிலவேளைகளில் அவை கடித்துவிட்டால், அவசரமாக வைத்தியசாலைக்குச் செல்வதற்கோ, மருந்துகளை எடுத்துக்கொள்வதற்கோ முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றும் அம்மக்கள் தெரிவித்துள்ளன.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டால், பிள்ளைகளுக்கான போக்குவரத்துச் செலவுக்கு பணம் கொடுக்கவேண்டும் மற்றும் தனியார் வகுப்புக் கட்டணம் செலுத்தவேண்டும். அப்பியாச கொப்பிகள் உள்ளிட்ட இதர உபகரணங்களை கொள்வனவு செய்துகொடுக்கவேண்டும். அவற்றுக்கெல்லாம் தற்போது கிடைக்கும் சம்பளம் போதாது என்றும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால், விலையேற்றம் மற்றும் செலவுகளுக்கு அமைய தங்களுக்கு ஏதாவது நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அம்மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## வெளியேறும் வரை போராடுவோம்

சுதத்.எச்.எம்.ஹேவா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவிகளிலிருந்து விலகும் வரை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் கலைச்செல்வி தெரிவித்தார்.

ஹட்டன் நகர மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் போராட்டக் கூடாரமொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஹட்டன் பிரதேச பிரஜைகள் குழு இடை நிறுத்தாத போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அதற்கான ஒத்துழைப்பை தேசிய மக்கள் சக்தி வழங்கும் என்றார்.

கோட்டா, ரணிலை அகற்றவே இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே எவ்வித மாற்று வழியுமின்றி அவர்கள் அகற்றப்பட வேண்டும் என்றார்.



### ஹட்டனில் பெட்ரோல் மாபியாக்களால்

## சாதாரண மக்கள் பாதிப்பு

சுதத்.எச்.எம். ஹேவா

ஹட்டன் பிரதேசத்தில் ஒருங்கமைக்கப்பட்ட ரீதியில் சிலரால் முன்னெடுக்கப்படும் பெட்ரோல் மாபியாவால், அத்தியாவசிய தேவைக்கு பெட்ரோலைப் பெறுவதில் சிலர் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி குறித்த சில் பெட்ரோலை சேகரித்து அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகனங்களுக்குப் பெட்ரோலைப் பெற்றுக்கொள்ளும் இவர்கள் அதனை கேன்களில் நிரப்பி, மீண்டும் வரிசைகளில் நின்று பெட்ரோலைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதற்காகவும் சிலர் இருப்பதாகவும் அவர்களின் ஒத்துழைப்புடனே இந்த பெட்ரோல் மாபியா செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அவசர பயணம் ஒன்றுக்காக நேற்று முன்தினம் (11) தான் பல மணித்தியாலங்கள் வரிசையில் நின்ற போதும் பெட்ரோல் கிடைக்காமை காரணமாக ஒரு லீற்றர் பெட்ரோலை 3,000 ரூபாய் வீதம் 10 லீற்றர் பெட்ரோலை ஓட்டோ சாரதியொருவரிடம் இருந்து பெற்றுக்கொண்டதாகவும் ஒருவர் தெரிவிக்கின்றார்.

எனவே இந்த சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் பெட்ரோல் மாபியாக்கள் அதிகரித்து விடுவர் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அனுதாபம்...

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் மறைவிற்கு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டாமான் ஜப்பானிய தூதரகத்தில் உள்ள இரங்கல் புத்தகத்தில் அனுதாபத்தை பதிவிட்டார்.





### நேற்று பகல் வரை

## ஹட்டனுக்கு டீசல் கிடைக்கவில்லை

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் இரண்டு நாட்களாக வரிசையில் வாகனங்கள் காத்திருக்கின்றன.

நேற்று முன்தினம் (11) இரவிலிருந்து குறித்த வாகன வரிசைகள் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஹட்டன்- பொகவந்தலாவை பிரதான வீதி, ஹட்டன்- கொழும்பு பிரதான வீதி, ஹட்டன் நகரிலுள்ள குறுக்கு வீதிகள் என்பவற்றில் அதிகளவான வாகனங்கள் நிறுத்தி வைக்கபட்டிந்தன.

இந்த நிலையில், நேற்றைய(12) தினம் 6,600 லீற்றர் கிடைக்கவுள்ளதென குறித்த எரிபொருள் நிலைய பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் 6600 லீற்றர் பெட்ரோல் ஹட்டன் ஐ.ஓ.சி நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட்டதால்




வரிசையில் நின்ற வாகனங்களுக்கு நேற்று (12) பெட்ரோல் விநியோகிக்கப்படாது என தெரிவித்து ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் அறிவித்துடன், வாகனங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

# மோசடியற்ற கரங்களுக்கு முன்னுரிமையளிப்பதே தேவை

அரசியல் என்பது சாக்கடையாகும், அதனையும் பூக்கடையாக மாற்றமுடியுமென அரசியலுக்கு நுழையும்போது, கூட்டங்களில் பலரும் பேசுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம். எதிர்காலங்களிலும் அதே பேச்சுக்களைக் கேட்கக்கூடும். அவ்வாறு பேசியவர்களில் பெரும்பாலானவர்கள், இறுதியில் ஊழல்,மோசடி குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுப்பர்.

நாட்டுக்கான, மக்களுக்கான, சமூகத்துக்கான, வீட்டுக்கான, சுகபோகத்துக்கான அரசியலென அரசியலை வகுத்துக்கொண்டே போகலாம். இவையெல்லாம் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை அடிப்படையாக வைத்தே பிரிக்கப்பட்டுச் செல்கின்றது.

“கோட்டா-மஹிந்த” “கோட்டா ரணில்” இவ்விரு அரசாங்கங்களும் ஊழல்,மோசடி நிறைந்த அரசாங்கங்களாகும் என்பது சிறியவர் முதல் பெரியோர் வரையிலும் நன்றாக விளங்கிவைத்துக் கொண்டுள்ளனர். அதனால்தான், அவ்விரு அரசாங்கங்களுக்கு எதிரான குரல்கள் வலுப்பெற்று நிற்கின்றன.

இறுதியாக நியமிக்கப்பட்ட நாட்டை மீட்டெடுக்கும் அரசாங்கத்துக்குள்ளும் ஊழல், மோசடிக்காரஅமைச்சர் இருந்ததை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே நிரூபித்திருந்தார். ஆக, “தேன் எடுத்தவன், புறங்கையை நக்காமல் இருக்கமாட்டான்” என்ற பழமொழிக்கு அர்த்தம் கற்பிப்பதாய் அது அமைந்திருக்கின்றது.

ஒவ்வோர் அரசாங்கத்திலும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களாக இருந்த பலரும் திடீரென பெரும் சொத்துக்களுக்கு சொந்தக்காரர்களாக மாறியிருக்கின்றனர். ஆளும் எதிர்க்கட்சிகளில் இருப்போர், பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதெல்லாம், ஊழல். மோசடிகளை புட்டுப்புட்டு வைத்திருக்கின்றனர்.

எனினும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவருமே நீதியின் முன், தண்டிக்கப்படவில்லை. குற்றஞ்சாட்டுபவர்கள் இறுதியில் தங்களுடைய பிரதிநிதித்துவதை இழந்துநிற்பதுதான் மிச்சமாய் நிற்கிறது.

நாடு, பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, அதாளபாதாளத்தில் விழுந்து கிடக்கிறது. அப்படியிருக்கும் போது, சுரண்டிக்கொள்ள நினைப்போருக்கு தீர்மானங்களை எடுக்கும் பதவிகளை வழங்காமல் இருப்பதே புத்திசாலிதனமானது. இல்லையேல், கடந்த அரசாங்கத்தின் மீது படிந்திருக்கும் கறையே, புதிய அரசாங்கத்தின் மீதும் படிந்துவிடும்.

ஸ்திரமான அரசாங்கமொன்று உருவாகுவதையே சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் எதிர்பார்த்திருக்கின்றன. இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஏற்கெனவே அறிவித்ததைப் போல இன்று (ஜூலை 13) பதவிவிலகினால், அடுத்தடுத்த செயற்பாடுகளை ஜனநாயக ரீதியில் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்திச் செல்லவேண்டும்.

அதனூடாக அசைக்கமுடியாத நம்பிக்கையை சர்வதேசத்துக்கு மட்டுமன்றி நாட்டு மக்களிடத்திலும் கட்டியெழுப்பவேண்டும். இல்லையேல், அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

“சிரங்கு பிடித்திருப்பவரின் கையும், கத்தியை எடுத்தவனின் கையும்” சும்மாவே இருக்காது எனச் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றோம். கறைப்படிந்திருக்கும் அரசியல்வாதிகளை ஓரங்கட்டி வைத்துவிட்டு தூய்மையான கரங்களுக்கு முன்னுரிமையைக் கொடுத்து, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நல்லபல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்துக்கு நல்லதாகுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உலகத்தில் இருந்தே கொண்டே அதற்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மக்களோடு மக்களாக வாழத் தெரியாமல், தங்களுக்குத் தாங்களே மயக்க நிலையில் இருக்கின்றனர். மயக்கத்தில் ஏது விழிப்பு!

இன்று உலகை மிட்டிவரும் பாரிய பிரச்சினை, போதைப் பொருள் பாவனை என்பதில் எதுவிதச் சந்தேகமும் இல்லை. முன்பெல்லாம் மது, கள் குடிப்பது வயது வந்தவர்களில் சிலரின் பழக்கமாக இருந்தது. கெட்டபழக்கம் உருமாறி நிறிகிறது.

இன்று மதுப்பாவனையைவிட மிகவும் ஆபத்தான போதைபொருள் பாவனைகள் இளம் வயதினரிடையே வயதுக்காரர்களிடையே தொற்றுநோய் போல் பெருகிவிட்டது. இதன்பொருட்டு கோடான கோடி பண விரயத்துடன், உயிரிழப்புகளும் தொடர்கின்றன. இளம் வயதிலேயே தன்நிலை மறந்து உடலை கெடுத்து ஈற்றில் மறைந்து போகின்றனர்.

இதன் தாக்கம் உலகை மிரட்டுகின்றது. பிள்ளைகளின் போக்கைக் கண்டுகொள்ளாமல், பாராமுகமாக இருப்பது மட்டுமல்ல கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையில் வாழ்வதுமாகும். போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக அழிப்பது எப்படி? ஒழுக்கம் கெட்டால் துன்பம்!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கோட்டா போகாமல், நெருக்கடி போகாது



எம்.எஸ்.எம். ஐயூப்

கோட்டாபய ராஜபக்ஷ இன்று (புதன்கிழமை) ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவிதது இருக்கிறார். இப்போது அவருக்கு அதைத் தவிர வேறு எந்த மாற்று வழியும் இல்லை. அது தான் இன்றைய யதார்த்தம்.

ஜூலை 9 சனிக்கிழமை இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் வரலாற்றில் ஒரு போதும் இடம்பெறாதவையாகும். இந்நாட்டு மன்னர் ஆட்சி காலத்ததுக்குப் பின்னர் ஓர் ஆட்சியாளர் பதவியிலிருந்து விரட்டியடிக்ப்பட்ட முதலாவது முறை இதுவாகும். இலங்கையில் மன்னர் ஆட்சிக் காலத்திலும் எந்தவொரு மன்னனும் மக்கள் கிளர்ச்சியொன்றால் விரட்டியடிக்கபட்டவில்லை. அந்த வகையில் மக்கள் கிளர்ச்சியால் இலங்கை வரலாற்றில் தூக்கியெறியப்பட்ட முதலாவது ஆட்சியாளர் கோட்டாபய ராஜபக்ஷவேயாவார்.

அந்த அவமானத்தை பூர்ணமாக அடைவதாக இருந்தால் அவர் இன்று பதவி துறக்க வேண்டும். அனேகமாக அவர் தாம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் அறிவித்தவாறு பதவியை இராஜினாமாச் செய்யலாம். எனினும், கடந்த சனிக்கிழமை நாடு முழுவதிலும் இருந்து கிளர்ந்தெழுந்த மக்கள் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மாளிகையையும் ஜனாதிபதி செயலகத்தையும் கைப்பற்றிக் கொண்டவுடன் இராஜினாமாச் செய்யாது 13 ஆம் திகதி இராஜிநாமாச் செய்வேன் என்று அவர் ஏன் அறிவித்தார் என்பது இன்னமும் தெளிவில்லாத விடயமாக இருக்கிறது.

அறிவித்தவாறே இராஜினாமாச் செய்வாரா அல்லது வேறு ஏதாவது சதித் திட்டமொன்று அந்த அறிவிப்புக்குப் பின்னால் உள்ளதா என்ற சந்தேகத்தை பலர் மனதில் உருவாக்கி இருக்கிறது.

கோட்டாபய பதவி துறக்க வேண்டும் அல்லது மக்கள் அவரை பதவி துறக்கச் செய்யவேண்டும் என்பது நியாயமானது மட்டுமல்லாது சரியான முடிவாகும். அத்தோடு ராஜபக்ஷர்களின் அரசியலும் இத்தோடு முடிவுக்கு கொண்டு வர முடியுமானால் அதனையும் செய்யத் தான் வேண்டும். அவற்றுக்கு அளவுக்கு அதிகமான காரணங்கள் இருக்கின்றன. கோட்டா அரசியல் அறிவோ நிர்வாக அறிவோ பொருளியல் அறிவோ இல்லாதவர் என்பதை அவரே தாம் ஜனாதிபதியாக இருந்த கடந்த இரண்டரை ஆண்டுகளில் நிரூபித்துள்ளார்.

சுதந்திரத்துக்குப் பின்னர் பதவியில் இருந்த சகல ஆட்சியாளர்களும் நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து இலங்கையை கடன்கார நாடாக மாற்றிவிட்டனர். தமது நிர்வாக பலவீனங்களையும் மக்களின் உண்மையான பிரச்சினைகளையும் மூடி மறைத்து தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக நாட்டில் இனவாதத்தை தூண்டி மக்கள் மத்தியில் பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளனர். எனவே, இடையில் உண்மையான நாட்டுப்பற்றுள்ள ஒரு புத்திசாளி இந்த அரசியல் பொருளாதார போக்கை சரியான திசைக்கு திருப்பிவிடாவிட்டால் நாடு இன்று எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடி இன்னும் பத்து வருடங்களிலாவது வந்தேதான் தீரும். ஆனால் கோட்டா அரசியல், பொருளியல், சர்வதேச இராஜதந்திரம் ஆகியவற்றைப் பற்றிய தமது அறிவின்மையாலும் கடும் இனவாதத்தாலும் அந்த நிலைமையை முன்கூட்டியே வரவழைத்துக் கொண்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல திறைசேரியில் பணம் இருக்க வேண்டும் ஆனால் கோட்டா பதவிக்கு வந்தவுடன் அரசாங்கத்தின் ஒரு வருட வருமானத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்குக்கு நிகரான அளவு வரிப்பணத்தை இரத்துச் செய்தார். கொவிட் 19 வைரஸின் தாக்கத்தாலும் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டது. அந்த நிலையில் விவசாயம் மட்டுமே பாரியளவில் பாதிக்கப்படாத துறையாக இருந்தது. இரசாயன உர இறக்குமதியை தடை செய்து அவர் விவசாயத்தையும் ஏறத்தாழ அழித்துவிட்டார்.

இலங்கை ரூபாவுடன் ஒப்பீட்டளவில் டொலரின் பெருமதி மிக வேகமாக அதிகரித்துச் சென்று நாட்டில் டொலர் கையிருப்பு முற்றாகவே கரைந்து சென்றிருந்த நிலையில் அவர் நியமித்த மத்திய வங்கி ஆளுநர் டொலருக்கு 203 ரூபாய் என்ற நிலையான மதிப்பை நிரணயித்தார். அதன் மூலம் வங்கித்துறைக்கு வரும் வெளிநாட்டுப் பணத் தொகையை பெருமளவில் தடுத்துவிட்டார்.

நாட்டின் கடன் பழு அதிகரித்து வெளிநாடுகளிடம் கடன் பெற முடியாத நிலைமை உருவாகி வந்த போது சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதைத் தவிர வேறு வழியில்லை என நிபுணர்களும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வழங்கிய ஆலோசனையை உரிய நேரத்தில் ஏற்க கோட்டா மறுத்தார். அதன் மூலம் நாட்டில் சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தினார். அதனால் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. அத்தோடு நாடே பொருளாதார ரீதியில் ஸ்தம்பித்துவிட்டது. இவ்வாறானதோர் ஆட்சியளர் தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டுமா?

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கன் விமானச் செவையை ஐக்கிய அரபு அமீரகத்தின் எமிரேட்ஸ் விமான நிறுவனமே நடத்தி வந்தது. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் 2006 ஆம் ஆண்டு திடீரென் ஒரு நாள் மஹிந்த 35 ஆசனங்களை கேட்ட போது ஸ்ரீலங்கன் நிறுவனம் அதனை மறுத்துவிட்டது. ஒரு நிறுவனம் அவ்வாறு ஏற்கெனவே ஆசனங்களை பதிவு செய்த பயணிகளின் பதிவுகளை இரத்துச் செய்து மற்றொரு சாராருக்கு வழங்க முடியாது. இந்த நிலையில் மஹிந்தவின் அரசாங்கம் எமிரேட்ஸூடனான ஒப்பந்தத்தை புதுப்பிக்க மறுத்து ஐக்கிய அரபு அமீரகத்தை பகைத்துக் கொண்டது.

கொழும்பில் வீதி நெரிசலை குறைப்பதற்காக தூண்கள் மீது ஓடும் ரயில் சேவை ஒன்றை ஆரம்பிக்க கடந்த அரசாங்கம் ஜப்பானுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. கோட்டா பதவிக்கு வந்தவுடன் ஜப்பானுடன் கலந்துரையாடாமலே அத்திட்டத்தை இரத்துச் செய்தார். கொழும்புத் துறைமுகத்தில் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக கடந்த அரசாங்கம் ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. கோட்டா கடந்த வருடம் அத்திட்டத்தையும் அந்த நாடுகளுடன் கலந்தாலோசிக்காமலேயே இருத்துச் செய்தார். இதனால் ஜப்பான் அரசாங்கத்தை பகைத்துக் கொண்டார்.

கட்டார் நாட்டு அமீரின் கீழ் இயங்கும் கட்டார் சரிட்டி என்ற நிறவனம் பயங்கரவாதத்துக்கு உதவுவதாக எவ்வித ஆதாரமும் இன்றி குற்றஞ்சாட்டி அதன் வங்கிக் கணக்கை கோட்டாவின் அரசாங்கம் 2019 ஆண்டு முடக்கியது. அதன் மூலம் கட்டார் நாட்டையும் பகைத்துக் கொண்டனர். கடந்த மாதம் அமைச்சர் காஞ்சன விஜேசேகர எரிபொருள் தேடி கட்டார் சென்ற போதே அத்தடை நீக்கப்பட்டது.

கொரோனா நோயால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை எரிக்க வேண்டாமென 57 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பின் செய்லாளர் நாயகம் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார். உலக சுகாதார அமைப்பும் அவ்வாரே கேட்டுக் கொண்டது. அரசாங்கம் அதனை நிராகரித்தது. அதன் மூலம் அரபுலகையும் பகைத்துக் கொண்டது.

மனித உரிமை விடயத்தில் மேற்கத்திய நாடுகளுடன் முட்டி மோதி அந்நாடுகளின் மதிப்பையும் ராஜபக்ஷர்கள் இழந்தனர். மனித உரிமைகளை மதிக்காவிட்டால் இலங்கைக்கு வழங்கும் ஜீஎஸ்பி வரிச் சலுகையை இரத்துச் செய்வதாக கடந்த வருடம் ஐரோப்பி பாராளுமன்றமும் அறிவித்தது.

சாதாரண நிலைமைகளில் இராஜதந்திர அதிகாரிகள் எந்தவொரு நாட்டையும் நேரடியாக விமர்சிப்பதில்லை. அவ்வாறு இருக்க இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் மோசமான முகாமைத்துவமேயாகும் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கடந்த மே மாதம் இந்தியாவின் என்டிரீவீ தொலைக்காட்சியுடனான நேர்காணல் ஒன்றின் போது கூறியிருந்தார். இலங்கைக்கு வழங்கப்படும் சர்வதேச உதவிகள் துஷ்பிரயோம் செய்யப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் அமெரிக்க செனட் சபை சர்வதேச நாணய நிதியத்தை எச்சரித்துள்ளன.

இலங்கையில் ஜப்பானிய தூதுவரும் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுவதில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டு இருந்தது. இவ்வாறு ராஜபக்ஷர்கள் பொருளாதாரத்தையும் அழித்துவிட்டு கஷ்டமான சந்தர்ப்பங்களில் உதவி பெறக்கூடிய வழிகளையும் அடைத்துவிட்டுள்ளனர். நாடு இன்று செய்வதறியாது தவிக்கிறது. நாட்டில் கடந்த கால ஆட்சியாளர்களும் நல்லவர்கள் அல்லர். ஆயினும் நாடு கண்ட மிகவும் மோசமான ஆடசியாளர்கள் ராஜபக்ஷர்களே.

எனவே, அவர்கள் தூக்கயெறியப்பட வேண்டும் என்பதில் எவ்வித விவாதத்துக்கும் இடமில்லை. ஆனால் அரசியல் துறையில் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பது இன்று நாடு எதிர்நோக்கி இருக்கும் மற்றொரு பாரதூரமான பிரச்சினையாகும். எதுவும் அரசியலமைப்புக்கு அமைவாகவே நடைபெற வேண்டும். அதன் படி தற்போதைய பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர் ஒருவரே கோட்டாவுக்குப் பின்னர் ஜனாதிபதியாக பதவி ஏற்க வேண்டும். அதற்காக மக்கள் எதிர்ப்பார்க்கும் வகையில் நேர்மையும் திறமையும் உள்ள உறுப்பினர்கள் பாராளுமன்றில் உள்ளனரா?

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதான கட்சிகளையும் அக் கட்சிகளுடன் ஒட்டிச் செயற்பட்ட கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் தரம் மக்களுக்குத் தெரியும். மக்கள் விடுதலை முன்னணியினர் மற்றும் நல்லவர்கள் திறமையானவர்கள் என்று கருதப்படும் சுமந்திரன் போன்றர்களுக்கு ஜனாதிபதியாகவோ ஜனாதிபதியாக கடமையாற்றவோ பாராளுமன்றத்தில் போதிய ஆதரவு கிடைக்கும் என்று நம்ப முடியாது. எனவே நாடு மீண்டும நிச்சயமற்ற நிலையை எதிர்நோக்கி இருக்கிறது.

## கடிதங்கள்

### தேக்கு மரக் காட்டினை பாதுகாக்கவும்

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் தேக்கங் காட்டினை பாதுகாப்பதற்கு முல்லைத்தீவ மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தேக்கங் காட்டில் இருந்து அடிக்கடி களவாக தேக்கு மரங்கள் வெட்டிச் செல்லப்படுகின்றன. ஐயன்கன்குளம் பொலிஸ் பிரிவில் இத்தேக்கங் காடு காணப்படுகின்றது.

வெட்டப்படும் தேக்கு மரங்கள்அக்கராயன் பொலிஸ்பிரிவு ஊடாகவே வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. மரங்கள் வெட்டக் கூடிய பருவம் வருவதற்கு முன்பே மரங்கள் வெட்டப்படுவதனால் ஓர் இயற்கை வளம் அழிக்கப்படுகின்றது.

மாவட்ட மட்ட சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கான அனுமதிகள் வழங்கக் கூடாது. கிராம மட்டத்தில் தேக்கு மரங்கள் வெட்டுவதற்கான அனுமதிகளை வழங்குவதில்லை என கிராம சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானமாக எடுக்கப்பட்டுள்ளது போதிலும் தேக்கு மரங்களை பாதுகாக்க வேண்டியவர்களே அடிக்கடி மரங்களை வெட்டிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் அம்பலப்பெருமாள் குளம் தேக்கங் காட்டினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிராம பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

6) நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை

# அலுவலகம் யாருடையது

## ஓ.பி.எஸ், இ.பி.எஸ் தரப்புக்கு நோட்டீஸ்


அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) கட்சி அலுவலகம் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை முடிவுசெய்ய இருதரப்பினரும் தாமாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ எதிர்வரும் 25ஆம் திதி ஆஜராக வேண்டும் என்று இருதரப்பினருக்கும் வருவாய்துறை நோட்டீஸ் வழங்கியுள்ளது.

அ.தி.மு.க கட்சி தலைமை அலுவலகத்திற்கு நேற்று (12) ஒரு பிரிவினர் சென்றபோது. அங்கிருந்த மற்றொரு பிரிவினர் கட்சி தலைமை அலுவலகத்தில் நுழையவிடாமல் தடுத்துள்ளனர். இதனால் இருதரப்பினரும் ஆயுதங்களுடன் கலவரத்தில் ஈடுபட்டு , கற்களையும் எறிந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

பணி செய்யாவிடாமல் பொலிஸாரை தடுத்ததுடன். அவ்வை சண்முகம் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு தனியார் பேருந்துகள் மற்றும் கார்களை சேதப்படுத்தினர்.







இதுதொடர்பாக, 13 பேர் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், பணி செய்யவிடாமல் தடுத்தபோது அவர்களை கைது செய்த பொலிஸார், நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் ஒரு தரப்பில் 24 நபர்களும் , மற்றொரு தரப்பில் 20 நபர்களும் காயமடைந்தனர். மேலும் காவல் துறையைச்சேர்ந்த 2 நபர்களும், ஒரு தனி நபர் என மொத்தம் 47 நபர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில் கட்சித் தலைமையக பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஓ.பன்னீர்செல்வம் (ஓ.பி.எஸ்), எடப்பாடி பழனிசாமி (இ.பி.எஸ்) தரப்பினருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சத்திஸ்கர்

# 10 மாத குழந்தைக்கு ரயில்வேயில் வேலை

சத்தீஸ்கர் மாநில பிஹாலி பகுதியிலுள்ள ரயில்வே யார்டில் ராஜேந்திர குமார் என்பவர் வேலை செய்துவந்தார். ஜூன் 1 ஆம் திகதி அவர் தனது மனைவி, 10 மாத பெண் குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது விபத்தில் சிக்கினார். இந்த விபத்தில் கணவன்,மனைவி இருவரும் உயிரிழந்தார். குழந்தை மட்டும் உயிர் பிழைத்துள்ளது.



குழந்தைக்கு ரயில்வே துறை சார்பில் அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டன. பொதுவாக அரசு துறையில் இருப்பவர் பணியின்போது உயிரிழந்தால் அவர் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணி வழங்கப்படுவது வழக்கம்.

அதனடிப்படையில், ராஜேந்திர குமாரின் 10 மாத குழந்தைக்கு அரசு பணி வழங்கப்பட்டுள்ளது. ரயில்வே கோட்டத்தின் தென்கிழக்கு மத்திய ரயில்வேயின் பணியாளர்கள் துறையில் (SECR) கருணை பணி நியமனத்திற்காக 10 மாத பெண் குழந்தை பதிவு செய்யப்பட்டது. 18 வயதை அடைந்தவுடன் அந்த பணியில் அவர் அமர்த்தப்படுவார். அக்குழந்தையின் கை ரேகைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

போபால்

# தம்பியின் உடலுடன் காத்திருந்த சிறுவன்

போபால் மத்தியப் பிரதேச மாநிலத்தில் எட்டு வயது சிறுவன் உயிரிழந்த தனது 2 வயது சகோதரரின் உடலை மடியில் வைத்து ஆம்புலன்ஸ்சுக்காக காத்திருந்த நெஞ்சை உருக்கும் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் இருந்து 450 கிமீ தூரத்தில் உள்ளது மொரோனா மாவட்டம். அந்த பகுதியைச் சேர்ந்த ஒருவர், தனது 2 வயது மகனை சிகிச்சைக்காக கொண்டுவந்துள்ளார். சிறுவனுக்கு நுரையீரல் தொடர்பாக நோய் இருந்துள்ளது.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அந்த சிறுவன் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த அந்த சிறுவனை தனது வீட்டிற்கு அழைத்து செல்ல அம்புலன்ஸை ஏற்பாடு செய்ய முயற்சித்துள்ளார். இவரின் கிராமம் மருத்துவமனையில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

ஆனால், மருத்துவமனை தரப்போ இலவச ஆம்புலன்ஸ் சேவை தற்போதைக்கு இல்லை என கைவிரித்துள்ளது. தனியார் ஆம்புலன்ஸ்சை ஏற்பாடு செய்யும் அளவிற்கு பூஜா ராமிற்கு வசதி இல்லாததால், தனது மற்றொரு மகனிடம் இரண்டு வயது மகனின் உடலை ஒப்படைத்து விட்டு மாற்று ஏற்பாடுக்காக சென்றுள்ளார். தனது இரண்டு வயது தம்பியின் உடலை மடியில் வைத்துக்கொண்டே 8 வயது சிறுவன், தந்தையின் வருகையை எதிர்பார்த்து அரை மணிநேரத்திற்கும் மேலாக பொதுவெளியில் அமர்ந்துள்ளார். இந்த காட்சி காண்போரின் நெஞ்சை உலுக்கியுள்ளது. இந்நிலையில், இதைக் கண்ட அப்பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி, உடலை சொந்த கிராமத்திற்கு கொண்டு செல்ல அம்புலன்ஸை ஏற்பாடு செய்து உதவியுள்ளார்



சென்னை

# தாக்கி பேசுவதே வேலையாய் போச்சு

எதற்கெடுத்தாலும் முதல்வரையும், திராவிட முன்னேற்ற கழகத்தையும் (தி.மு.க) தாக்கிப் பேசுவது எடப்பாடி பழனிசாமிக்கு வாடிக்கையென திமுக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி சாடியுள்ளார்.

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) அலுவலக வன்முறைக்கும், தி.மு.கவுக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும் கூறியுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் ஓபிஎஸ்-இபிஎஸ் ஆதரவாளர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இருதரப்பினரும் எதிர் எதிரே நின்றுக்கொண்டு கற்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதைத்தொடர்ந்து, சென்னை ராஜீவ்காந்தி அரசு



பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிமுக தொண்டர்களை எடப்பாடி பழனிசாமி நலம் விசாரித்தார். பின்னர், செய்தியாளர்களை சந்தித்த அவர்

ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்குள் நுழைந்து முக்கிய ஆவணங்களையும் அள்ளிச் சென்றுள்ளனர். பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொலிஸார் அ.தி.மு.க., தொண்டர்களையே தாக்கியுள்ளனர். பொலிஸாருடன் கூட்டு வைத்துக் கொண்டு ஓ.பன்னீர்செல்வம் இந்த செயலில் ஈடுபட்டுள்ளார். திமுக அரசும், ஓ.பன்னீர்செல்வமும் கைக்கோர்த்து இதனை செய்துள்ளனர். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. காலம் மாறும்போது தக்க பாடம் புகட்டுவோம் என்றார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே ஆர். எஸ்.பாரதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# வீடு தேடி உதவி...



எரிபொருள் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை மற்றும் மீராவோடை பகுதி ஓட்டோ ஓட்டுநர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

1,500 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகளை 51 ஓட்டோ ஓட்டுநர்களுக்கு காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினர் வீடு வீடாகச் தேடிச் சென்று வழங்கி வைத்தனர்.

(படங்கள் - எச்.எம்.எம்.பர்ஸான்)





# வரவேற்பு...

யாழ். - கதிர்காம பாதயாத்திரை அடியார்கள், காரைதீவு சித்தானைக்குட்டி சமாதி கோவிலுக்கு நேற்று முன்தினம் (11) வருகை தந்து, பஜனை பாடி காலைப்போசனத்தில் பங்கேற்றனர்.

(படங்கள் - சகா)







# அன்பளிப்பு...

காத்தான்குடி அல்ஹிறா மகா வித்தியாலயத்துக்கு கூரை வேலைக்கான பொருட்கள் அன்பளிக்கப்பட்டன.

கட்டாரில் கடமைபுரியும் காத்தான்குடியைச் சேர்ந்த நலன்விரும்பிகள் (KCQ) அமைப்பு மற்றும் அல்ஹிறா மகா வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கம் ஆகியன இவற்றை வழங்கின.

(படங்கள் - எம்.எஸ்.எம் நூர்தீன்)











# பல்கலைக்கழகத்தில்...

சமூகம் மற்றும் தொழில்சார் துறைகளை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் நிலையத்தின் திறப்பு விழா, பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில், பல்கலைக்கழக வளாகத்தினுள் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகஸ்தர்களுக்கு மரக்கறி கன்றுகள் வழங்கப்பட்டன.

# முத்தமிழ் வித்தகர்...

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது மகா சமாதி தின நிகழ்வுகள், அவர் பிறந்த காரைதீவில் நேற்று முன்தினம் (11) இரவு ஆரம்பமாகின.

(படங்கள் - சகா)







நுவரெலியா விளையாட்டுக் கழக பிலியட்ஸ் போட்டியில்

# சம்பியனான ஆறுமுகம்

■ பி. கேதீஸ்

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் 100 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நடத்ததப்பட்ட பிலியட்ஸ் போட்டியில் சங்கப்பிள்ளை ஆறுமுகம் சம்பியனானார்.

42 வீரர்கள் பங்குபற்றிய இப்போட்டியின் இறுதிப் போட்டியில் சுரஞ்சித் சமரநாயக்கவை 62--59 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றே ஆறுமுகம் சம்பியனானார்.

39 வீரர்கள் பங்குபற்றிய ஸ்னோக்கர் போட்டியில் 45-30 என்ற புள்ளிகள் கணக்கில் இறுதிப் போட்டியில் அனுரசாந்த ஹெட்டியாராச்சியை வென்று சிரிர பெர்ணாண்டோ சம்பியனானார்.

இரட்டையர் பிரிவு பூப்பந்தாட்டப் போட்டியில் அனுரசாந்த ஹெட்டியாராச்சி, சுரஞ்சித் சமரநாயக்க இணையை வென்று ஜானக்க வீரரட்ண, பிறின்ஸ் சலீம் சம்பியனாகினர்.






# இன்று ஆரம்பமாகும் எ:.ப்.எஸ்.கே பிறீமியர் லீக்

■ எம்.என்.எம். அப்ராஸ்

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்தால் ஆண்டுதோறும் நடாத்தப்படுகின்ற கிரிக்கெட் திருவிழாவான எப்.எஸ்.கே. மியன்டாட் பிறீமியர் லீக் கடினபந்து கிரிக்கெட் தொடரானது மிகக் கோலாகலமாக சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

மியன்டாட் விளையாட்டுக் கழகத்தினரை ஒன்றிணைத்து சாந்தம் சலஞ்சர்ஸ், மருதூர் வொரியர்ஸ், வொலி லயன்ஸ், மாளிகா யுனைட்டெட் ஆகிய நான்கு அணிகளாகப் பிரிக்கப்பட்டு குறித்த போட்டிகள் இடம்பெறுகின்றமை சிறப்பம்சமாகும்.

இப்போட்டிகள் யாவும் சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. மியன்டாட் கழகத்தின் 80 கடினபந்து விளையாட்டு வீரர்கள் குறித்த போட்டியில் மொத்தமாக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

FSK MIANDAD PREMIER LEAGUE 2022
SANTHAM CHALLANGERS
MARUTHOOR WARRIORS
MPL SEASON - II
MALIGA UNITED
BOLT LIONS

மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிக்கு

# கல்முனை அல் – பஹ்ரியாவிலிருந்து அதிகூடிய மாணவர் தெரிவு

■ எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை வலயப் பாடசாலைகளுகிடையிலான மெய்வல்லுநர் போட்டியானது கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் கல்முனை வலயத்திலுள்ள ஐந்து கோட்டங்களைச் சேர்ந்த சுமார் 30 பாடசாலைகள் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவ, மாணவிகள் 5 முதலாமிடங்களையும், 9 இரண்டாமிடங்களையும், 4 மூன்றாமிடங்களையும் பெற்று மாகாண மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இவ்வெற்றியானது அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை வரலாற்றில் அதிகூடிய போட்டி நிகழ்ச்சிகளில் மாகாண மட்டப் போட்டியில் மாணவ, மாணவிகள் பங்குபற்றுவது இதுவே முதல் முறையாகும். இவ் வீர, வீராங்கனைகளுக்கு பயிற்றுவித்த எம்.ஏ.எம். றியால், யூ.எல்.எம். சிபான், ஏ.டப்ளியு.எம். ஆசாத்கான் ஆகியோருக்கு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசால் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் மாணவர், கல்விசாரா ஊழியர், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள், பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.




நாகேந்திரன் சம்பியன் கிண்ணத் தொடர்:

# சம்பியனானது களுதாவளை கெனடி

■ க. விஜயரெத்தினம்

அமரர் நாகேந்திரன் வெற்றிக் கிண்ணத் தொடரில் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வருடாவருடம் அமரர் நாகேந்திரனது குடும்பத்தினரால் நடாத்தப்படும் இந்த மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் துறைநீலாவணை மத்திய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு எவகிறீன் விளையாட்டுக் கழகத்தை வென்றே சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற எவகிறீன் விளையாட்டுக் கழகம், முதலில் துடுப்பெடுத்தாடிய ஐந்து ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 43 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கெனடி 2.5 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

சம்பியனான கெனடிக்கு 40,000 ரூபாய் பணப்பரிசும், இரண்டாமிடத்தைப் பெற்ற எவகிறீனுக்கு 25,000 ரூபாய் பணப்பரிசும், மூன்றாமிடத்தைப் பெற்ற துறைநீலாவணை லயன் ஸ்டார் கிரிக்கெட் அணியினருக்கு 10,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.



நான்காமிடத்தைப் பெற்ற மட்டக்களப்பு ஜோன் றீமிக்கிஸ் கிரிக்கெட் அணியினருக்கு 5,000 ரூபாய் பணப்பரிசுடன், தொடரின் நாயகனாக டிலு தெரிவுசெய்யப்பட்டு 5,000 ரூபாய் பணப்பரிசும் கிண்ணமும், இறுதிப் போட்டியின் நாயகனாக ஹரி தெரிவுசெய்யப்பட்டு 3,000 ரூபாய் பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்பட்டது.

அதிக ஓட்டங்களை குவித்த வினோதனுக்கு பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்பட்டதுடன், இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட இரண்டு அணியினருக்கும் பதக்கம் அணிவிக்கப்பட்டது.

கடந்த ஒருமாத காலமாக மின்னொளியில் இடம்பெற்று வந்த இத்தொடரில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 79 அணிகள் பங்குபற்றியிருந்தன.

பிரித்தானியா

# வெயிலால் எரிந்த தண்டவாளம்

லண்டனில் கோடை வெயிலின் உஷ்ணம் தாங்க முடியாமல் நீச்சல் குளங்கள், கடற்கரை, தண்ணீர் பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களை நோக்கி மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அண்மையில் லண்டன் விக்டோரியா நகர் நோக்கி செல்லும் ரயில்வே தண்டவாளம் கடும் வெப்பத்தின் காரணமாக தானாகத் தீப் பற்றி எரிந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# உயிரைப் பறிக்கும் தோட்டம்

பிரித்தானியாவில் நார்தம்பர்லேண்ட் கவுண்டியில் உள்ள ஆல்ன்விக் என்ற பகுதியில் poison garden என அழைக்கப்படும் உலகின் மிகக் கொடிய, ஆபத்தான தோட்டமொன்று அமைத்துள்ளது.

இத் தோட்டத்தில் கண்ணை கவரும் வகையில் ஏராளமான செடிகள் வளர்க்கப்பட்டு வருவதோடு, மனிதர்களைக் கொல்லக் கூடிய 100 க்கும் மேற்பட்ட விஷச் செடிகளும் வளர்க்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன் காரணமாக இங்கு வளரும் செடிகளை சுற்றிப் பார்க்க வருபவர்கள் யாரும் அவற்றை தொடவோ, நுகர்ந்து பார்க்கவோ உண்ணவோ கூடாது எனவும் அதையும் மீறி செய்தால் இறந்து போவது உறுதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மேலும் இத் தோட்டத்தின் நுழைவாயில் எலும்புக்கூடு பொறிக்கப்பட்ட பலகையும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# கர்ப்பிணி மனைவியைக் கொன்ற கணவர்



அமெரிக்காவின் மிசூரி மாகாணத்தில் வசித்து வந்த 31 வயதான பியூ ரோத்வெல் என்பவர், 6 வார கர்ப்பிணியான தனது மனைவி ஜெனிபரைக் கொடூரமாகக் கொலை செய்துள்ளதுடன், அதன் பின்னர் தன் மனைவி காணாமல் போனதாகப் பொலிஸாரிடமும் புகார் தெரிவித்துள்ளார். இதனைத்தொடர்ந்து ஒரு வாரம் கழித்து ஜெனிபரின் உடல் கண்டறியப்படவே, இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

விசாரணையில் அவருக்கு வேறு பெண்ணுடன் இருந்த தொடர்பு பற்றி ஜெனிஃபர் கேட்ட பின்பு, ஏற்பட்ட மோதலால் மனைவியை அடித்ததாகவும் திட்டமிட்டு கொலை செய்யவில்லை என்றும் கூறியுள்ளார். ஆனால் ஜெனிபர் கொலை செய்யப்படுவதற்கு முன், பியூ ரோத்வெல் தன் காதலி உடன் பகிர்ந்து கொண்ட குறுஞ்செய்திகள் சேகரிக்கப்பட்டன. அதன்படி அவர் தன் மனைவியைத் திட்டமிட்டு கொலை செய்தமை உறுதியானது. எனவே, அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளர்.

பிரித்தானியா

# மான்டி நார்மன் காலமானார்

ஜேம்ஸ் போண்ட் படங்களுக்கு இசையமைத்த பிரபல பிரித்தானிய இசையமைப்பாளர் மான்டி நார்மன் தனது 94 ஆவது வயதில் நேற்று முன்தினம் (11) உயிரிழந்தார்.

லண்டன் மான்டி நாசரோவிச் நகரில் வசித்து வந்த நிலையில், உடல் நலக்குறைவினால் உயிரிழந்ததாக அவரது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1960களில் வெளியான ஜேம்ஸ் போண்ட் படத்திற்கு இசை வடிவில் உயிர் கொடுத்த இவரது பின்னனி இசை, ரசிகர்கள் மத்தியில் நீங்காத இடத்தைப் பிடித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

338 ஆண்டுகள் பழமையான

# விடுதி தீக்கிரை

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாகாணத்தில் சுமார் 338 ஆண்டுகள் பழமையான விடுதியொன்று, திடீரென தீப்பற்றி எரிந்ததில் குறித்த விடுதியின் பெரும் பகுதி தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தீவான Nantucket தீவில் 17 நூற்றாண்டில் கட்டப்பட்ட வெராண்ட எனும் விடுதியே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து உடனடியாக அவ்விடுதியில் இருந்த விருந்தினர்கள் வெளியேற்றப்பட்ட நிலையில், அருகில் இருந்த கட்டடங்களுக்கும் தீ பரவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தீயணைப்பு பணியில் ஈடுபட்ட 4 வீரர்கள் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

'ஜேம்ஸ் வெப்' விண்வெளி தொலைநோக்கியின்

# முதல் வண்ணப்படம்

நாசாவால் விண்ணில் ஏவப்பட்ட உலகின் மிகப்பெரிய சக்தி மற்றும் திறன் வாய்ந்த 'ஜேம்ஸ் வெப்' விண்வெளி தொலைநோக்கி, பிரெஞ்ச் கயானாவில் உள்ள ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து ஏரியன் 5 ரொக்கெட் மூலம் கடந்த டிசம்பர் மாதம் 25-ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

நிலவில் இருந்து மூன்று மடங்கு தொலைவுக்குச் சென்று, சூரியனை சுற்றியவாறு தனது ஆய்வுப்பணியை மேற்கொள்ளும் இத் தொலைநோக்கி நவீன மனித குலம் முன்பு அறிந்திடாத பல அரிய தகவல்களை அடுத்த சில ஆண்டுகளுக்கு அளிக்க உள்ளது.

அந்த வகையில், அண்மையில் ஜேமஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி மூலம் எடுக்கப்பட்ட முதல் வண்ணப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது.

இதனை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 13 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.